பக்கங்கள் 16+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## கிழக்குப் பல்கலையில் பொலிஸார் அட்டகாசம்

(ந.லோகதயாளன்)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வைப் பொலிஸார்

02 ▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 05 சனிக்கிழமை 18.05.2024 அதிர்வு 292



இலங்கை வந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட், இன்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில், இறுதிப் போரில் உயிரிழந்தவர்களை நினைவேந்தி மலர் தூவி, மண்டியிட்டு அஞ்சலி செலுத்தினார். (மேலதிக படங்கள் 5ஆம் பக்கத்தில்)



# கண்ணீரில் நனைந்தது முள்ளிவாய்க்கால் மண்

## உயிரிழந்த உறவுகளுக்குச் சுடரேற்றி அஞ்சலி







இறுதிப் போரில் அரச படைகளால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட தமிழினப் படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இன்று பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

02 ▶

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில்










# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில்




















# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில்









## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கண்ணீரில்...**

முள்ளிவாய்க்கால் தந்த துயர வலிகளை மனங்களில் நிறுத்திக்கொண்டு உயிர் பறிக்கப்பட்ட தமது உறவுகளுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு கண்ணீர்விட்டு அழுதவாறு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட தாய் ஒருவர் காலை 10.30 மணியளவில் பொதுச் சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து, ஏனையவர்களும் சுடரேற்றி, அக வணக்கம் செலுத்தி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது, முள்ளிவாய்க்கால் பிரகடனமும் வெளியிடப்பட்டு, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

ஈழத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஆகப் பிந்திய – மிக மோசமான இந்தப் படுகொலையின் பெரும் துயரை நினைவேந்தும் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் மாத்திரமல்லாது, பூமிப் பந்தெங்கும் ஈழத் தமிழர்கள் பரவி – சிதறி வாழும் தேசங்களிலும் இன்று நடைபெற்றன.

---

**கிழக்குப் பல்கலையில்...**

அட்டகாசத்தில் ஈடுபட்டுத் தடுத்து நிறுத்தினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முள்ளிவாய்க்கால் தின நினைவேந்தல் நிகழ்வு கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களால் இன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், இன்று காலை முள்ளிவாய்க்கால் கஞ்சியைத் தயாரிக்க மாணவர்கள் தயாரானபோது அங்கு வந்த ஏறாவூர் பொலிஸாரால் அந்த நிகழ்வுக்குத் தடையேற்படுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வை ஏறாவூர் பொலிஸார் அட்டகாசத்தில் ஈடுபட்டுத் தடுத்தி நிறுத்தினர்.

முள்ளிவாய்க்கால் கஞ்சியைத் தயாரிப்பதற்கு வைக்கப்பட்ட அடுப்பைப் பொலிஸார் சப்பாத்துக் கால்களால் தட்டி அராஜகம் புரிந்தனர் என்று மாணவர்கள் குற்றஞ்சாட்டினர்.



# மலர் தூவி, மண்டியிட்டு அஞ்சலி செலுத்திய சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர்

இலங்கை வந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட், இன்று முள்ளி வாய்க்கால் நினைவு முற்றத்தில், இறுதிப் போரில் உயிரிழந்தவர்களை நினைவேந்தி மலர் தூவி, மண்டியிட்டு அஞ்சலி செலுத்தினார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்கும் அவர் கருத்துத் தெரிவித்தார். அத்துடன் இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் சொந்தங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடனும் அவர் கலந்துரையாடினார்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஏன் இந்த வெறித்தனம்?

இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தின் ஓர் அங்கம் பேரவலமாக முடிவுற்ற காதை முள்ளிவாய்க்காலில்தான் பூர்த்தியானது.

ஆனால், அது, நமது உரிமைப் போராட்டச் சரித்திரத்தின் ஓர் அத்தியாயத்தின் முடிவுப் புள்ளிதான். அது, உரிமைப் போராட்டத்தின் அந்தமல்ல.

சுதந்திரத்திற்கான போராட்டத்தின் ஒரு வடிவத்தின் எல்லையாக வேண்டுமானால் அதைக் குறிப்பிடலாம். ஆனால் அங்கிருந்து இன்னொரு வடிவத்தில் அந்தப் போராட்டம் மீளப் புனர்ஜென்மம் எடுத்திருக்கின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அந்தப் புதிய போராட்ட வடிவத்திற்கான முதனிலை ஊக்கியாக இருப்பது முள்ளிவாய்க்காலுடன் முடிவுற்ற பேரவலத்திற்கான நீதி தேடல் என்னும் அவா - மனவுணர்வு - மனவுறுதி - தான். 'நினைவேந்தல்' என்ற உரிமை ஆயுதம் மூலம் அந்தத் தேடலுக்கு உருவேற்றிக் கொள்ள வேண்டும் நாம்.

அதைத்தான் இன்று தமிழினம் தனது கடமையாக முன்னெடுத்திருக்கின்றது.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் ஆயுத வழியில் இருந்து மீண்டும் அஹிம்சை மார்க்கத்திற்கு திரும்பிய ஒரு முக்கிய சந்திப்பு புள்ளி முள்ளிவாய்க்கால்.

இதுவரை காலமும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் பின்னால் உள்ள நியாயங்களை - தர்மங்களை - எல்லாம் மறைத்து, அதனைப் பயங்கரவாதமாகச் சித்திரித்த பௌத்த - சிங்களப் பேரினவாதம், முள்ளிவாய்க்கால் பேரவலத்தைத் தமிழினம் மீது கொடூரமாய்ச் சுமத்திய பின்னர் இப்போது தன்னைப் பெரும் இக்கட்டு நிலைக்குள் சிக்க வைத்திருக்கின்றது என்பதும் கண்கூடு.

ஒன்று - தமிழர்களின் உரிமைக்கான போராட்டங்களை இனி 'பயங்கரவாதம்' என்று அடையாளப்படுத்தி சித்திரிக்க முடியாத நெருக்கடி. அதனால் இப்போது அந்த நடவடிக்கைகளை 'பிரிவினைவாதம்', 'புலி மீளுருவாக்கம்', 'இனங்களுக்கு இடையில் குரோதத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்துதல்' என்று புதுப்புது வியாக்கியானங்கள் மூலம் அர்த்தப்படுத்த முயல்கின்றது சிங்களம்.

அடுத்தது - தமிழர் தரப்பின் 'பயங்கரவாதம்' பற்றிய அபவாத பேச்சும், பொய் பிரச்சாரங்களும் அடங்கிப் போக, முள்ளிவாய்க்கால் வரை அரசும் படைகளும் புரிந்த 'அரச பயங்கரவாதம்' பற்றிய விவகாரம் விஸ்வரூபம் எடுத்து, அதற்கான நீதி தேடலும் பொறுப்பு கூற வைத்தலும் சர்வதேச முக்கியத்துவம் பெறத் தொடங்கி இருக்கின்றன.

'நினைவேந்தல்' என்ற உரிமை ஆயுதத்தை மேலும் ஐக்கியமாக - ஒரே குரலில் - சர்வதேசத்தின் மனச்சாட்சியை தட்டும் விதத்தில் நாம் கையாளும் போது, அதன் பிரதிபலிப்பு, அரச பயங்கரவாதத்திற்குப் பொறுப்புக் கூற வைக்கும் சர்வதேச அழுத்தமாக இலங்கை அரசு மீதும் படைத்தரப்பின் மீதும் பாயும் என்பதும் தெளிவானது.

தமிழர்களின் நினைவேந்தல் எழுச்சி என்பது அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி தேடுவதற்கும், அதன் மூலம் சிங்களத்தின் கொடூரங்களுக்குப் பொறுப்பு கூற வைப்பதற்கான நியாயமான விசாரணைகளுக்கு சர்வதேச அழுத்தத்திற்கு உருகொடுப்பதற்கும் வழி செய்வதாக இருக்கும்.

எது, எப்படி என்றாலும் தமிழர்களின் நினைவேந்தலும், அதை ஒட்டிய எழுச்சியும்தான் இலங்கைத் தரப்புப் புரிந்த யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற அத்துமீறல்களுக்காக அரசையும் படைகளையும் சர்வதேச நீதி பொறிமுறையின் முன்னாள் நிறுத்தி, பொறுப்புக் கூற வைத்து, தண்டனை வாங்கித் தரச் செய்யும் அழுத்தத்தை ஏற்படுத்தி நிற்கும் என்பதை சிங்களம் நன்கு உணர்ந்து கொண்டமையாலேயே நினைவேந்தல் நடவடிக்கைகளுக்கு - உரிமைகளுக்கு - எதிராக அது இப்படி வெறிக்கொண்டு நிற்கின்றது.

சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறியோருக்கு எதிராக நடந்த பொலிஸ் அராஜகம், இன்று மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டிய நிகழ்வில் பொலிஸ் புரிந்த அட்டூழியம் போன்றவை எல்லாவற்றுக்கு பின்னாலும் புதைந்து கிடக்கும் காரணமும் நோக்கமும் இதுதான்.

# சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் சுமந்திரன் எம்.பியுடன் இன்று காலை பேச்சு

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் அம்மையார் முள்ளிவாய்க்காலில் இன்று இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தினார். அதற்கு முன்னர் இன்று காலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை முல்லைத்தீவு "அலை" சுற்றுலா விடுதியில் காலை உணவுடன் சந்தித்து சுமார் ஒன்றரை மணிநேரம் விரிவான கலந்துரையாடலில் அவர் ஈடுபட்டார்.





முல்லைத்தீவு சுயாதீன செய்தி வட்டாரங்கள் இந்தச் சந்திப்பு பற்றி முதலில் தகவல் வெளியிட்டன. அது குறித்து விசாரித்த போது அதனை சுமந்திரன் எம்.பி. ஊர்ஜிதம் செய்தார்.

"மிக ஆரோக்கியமான கலந்துரையாடல். அரசியல் தீர்வு, பொறுப்புக் கூற வைத்தல் பற்றி எல்லாம் ஆழமாக உரையாடினோம். ரோம் ஒப்பந்தத்தில் இலங்கையை ஒப்பமிட வைக்கும் அழுத்தத்தை நாம் அரசுக்குத் தொடர்ந்து கொடுப்பதை நல்ல உத்தியாக அவர் வரவேற்றார். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வைப்பதற்கு, அந்த ஒப்பந்தத்தில் இலங்கையைக் கையெழுத்திட வைப்பதுதான் ஒரே மார்க்கம் என்று அவர் வலியுறுத்தினார்"– என்றார் சுமந்திரன் எம்.பி.



# தலைமன்னார் லோறன்சியார் தேவாலயத்தில நினைவேந்தல்






(மன்னார்)

இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூறும் முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் இரங்கல் திருப்பலி தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் தேவாலயத்தில் இன்று சனிக்கிழமை (18) காலை ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளுக்காக விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இறந்த உறவுகளுக்காக மலர் அஞ்சலியும் இடம்பெற்றது.

இரங்கல் திருப்பலியை தொடர்ந்து ஆலய வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி காய்ச்சப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது தென் பகுதியில் இருந்து தலைமன்னார் பகுதிக்கு சுற்றுலா வந்த சிங்கள மக்களுக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து தெளிவுபடுத்தப்பட்ட நிலையில் அவர்களும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியை பெற்றுக் கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இரங்கல் திருப்பலி மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வை ஆலய அருட்பணி பேரவை மற்றும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

# 7 இலங்கை மீனவர்கள் இந்தியக் கடலில் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கை மீன்பிடிப் படகில் இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 7 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏழு மீனவர்களுடன் இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டே தூத்துக்குடி இந்தியக் கடலோர காவல் படையைச் சேர்ந்த கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வூசைவல ஆயாய – 6 எனப் பெயர் பொறிக்கப்பட்ட IMUL - A - 0935 என்ற எண் கொண்ட காலி மாவட்டத்தைச் சேர்ந்த படகே இந்தியாவின் கன்னியாகுமரி கடல் பகுதியில் சிக்கியது என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில்














# அம்பாறையில் இரு வேறு இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி





மே – 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் செயற்பாடு அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பகுதியில் உள்ள வளத்தாப்பிட்டி, வீரமுனை பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை (17) மாலை இடம்பெற்றது.

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெயசிறில், சமூக செயற்பாட்டாளர் செல்வராஜா கணேஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் புஷ்பராஜ் துஷானந்தன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

(மன்னார்)

இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூறும் முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை (18) வடக்கு - கிழக்கு பகுதிகளில் நினைவு கூறப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் மன்னாரில் இன்றைய தினம் சனிக்கிழமை (18) காலை 9 மணியளவில் தமிழரசு கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழரசு கட்சியின் மன்னார் கிளை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் மன்னார் நகர் பகுதியில் உள்ள தந்தை செல்வா சிலைப் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மக்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.










# இத்தாவில் மாதுளைத் தோட்டத்தின் விரிவாக்கம் பற்றி டக்ளஸ் ஆராய்வு!



பளை இத்தாவில் மாதுளைச் செய்கை தோட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம் செய்து அதன் விரிவாக்கம் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

பளைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் மாதுளைச் செய்கை மாதிரித் தோட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுச் சென்று பார்வையிட்டுள்ளார்.

பளை இத்தாவில் கிராமத்தில் இந்த மாதிரித் தோட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மாதுளை பயிர்ச் செய்கையில் எதிர்கொள்ளப்படும் ஏது நிலைகள் தொடர்பில் துறைசார் அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோருடன் அமைச்சர் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது பயிர்ச்செய்கையில் அறுவடைக்காலம் வரையிலான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஊடுபயிர் செய்கையின் பெறுபேறுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்த நிலையில் மாதுளைப் பயிர்ச் செய்கையின் அறுவடைகளை சந்தைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் மற்றும் பொதுவான விற்பனை மையம் தொடர்பிலும் இடர்பாடுகள் குறித்தும் தெரியப் படுத்திய விவசாயிகள் குரங்குகளால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் சுட்டிக்காட்டி அவற்றுக்கான ஏற்பாடுகளை செய்து தருமாறும் கோரியிருந்தனர்

இந்தத் தோட்டத்தின் ஏது நிலைகள் மற்றும் கருத்துக்களை அவதானத்தில் கொண்ட அமைச்சர், அது தொடர்பில் ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து தருவார் என்று தெரிவித்துள்ளார்.

# பொத்துவிலில் விடுவிக்கப்படவுள்ள 2 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள்!

## நாடாளுமன்ற உறுப்பினர் முஸாரப் தெரிவிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

பொத்துவிலில் சுமார் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட உள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் தெரிவித்தார்.

“என்ன செய்தார் எம்.பி.” எனும் தொனிப்பொருளில் பொத்துவில் பிரதான வீதியில் நேற்று (17) இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றும்போது,



உங்கள் எம். பியின் பெருமையை இந்த ஊர் எப்படிப் புரிந்து இருக்கிறதோ இல்லையோ இந்த ஊருக்கு வெளியில் உள்ள மக்கள் புரிந்து இருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாக சாட்சி சொல்வார்கள்.

அம்பாறை மாவட்ட காணி விடுவிப்பு சம்பந்தமாக காத்திரமாக செயற்பட்ட எம்.பி. யார் என்று கேட்டால், மக்களுக்குத் தெரியும் முஸாரப் எம்.பி. என்று சொல்வார்கள்.

இந்த காணி விடுவிப்புக்காக நான் கடுமையாக செயற்பட்டு வருகிறேன். பொத்துவிலில் சுமார் 2500 இற்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் விடுவிக் கப்படவுள்ளன.

உங்கள் எம். பியினுடைய பெருமையை இந்த ஊர் எப்படிப் புரிந்து இருக்கிறதோ இல்லையோ இந்த ஊருக்கு வெளியில் உள்ள மக்கள் புரிந்து இருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாகச் சாட்சி சொல்வார்கள்.- என்றார்.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு!

## ஹரீஸ் எம்.பியின் வேண்டுகோளுக்கு நடவடிக்கை!

**(நூறுல் ஹுதா உமர்)**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண விவசாயிகளின் நஷ்டஈட்டை வழங்குவதில் காலதாமத நிலை நீட்டித்த நிலையில் நேற்று (16) அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான டீ.பி.ஹேரத், முஹான் டீ சில்வா அமைச்சின் செயலாளர், விவசாய காப்புறுதி திணைக்கள அதிகாரிகளை விவசாய அமைச்சில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டை வழங்காமையால் அவர்கள் பாதிக்கப்பட்ட விதம், அடுத்த பயிர் செய்கைக்கு அவர்கள் தயாராக உள்ள நிலையில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் விளக்கினார். உடனடியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைத்தார்.

இவ்வருட ஆரம்பத்தில் பெய்த மழை காரணமாக கிழக்கு மாகாணம், அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டம் வெள்ளப்பெருக்கில் வெகுவாக பாதிக்கப்பட்டது.

இதன்போது அறுவடைக்கு தயாராக இருந்த பல்லாயிரம் ஏக்கர் நெல் வேளாண்மை வெள்ளத்தில் அள்ளுண்டு பாதிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான விவசாயிகளுக்கு இதனால் பலத்த நஷ்டம் ஏற்பட்டது.

இந்த விவசாயிகளுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் திகாமாடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை ஏற்கனவே சந்தித்து விவசாயிகளின் பாதிப்பு நிலைகளை விளக்கி நஷ்டஈட்டை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனை அடுத்து விவசாய அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு நஷ்டஈட்டை வழங்க தேவையான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறு அன்று பணித்திருந்தார்.

இது சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டும் மந்தகதியில் இருந்த நஷ்டஈடு வழங்கும் பணிகள் தொடர்பில் கேட்டறிந்த அமைச்சர் மஹிந்த அமரவீர, அடுத்த வாரத்தினுள் இந்த நஷ்ட ஈடுகளை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சின் செயலாளர், விவசாய காப்புறுதிக்குப் பொறுப்பான அதிகாரிகள் மற்றும் நஷ்டஈட்டுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர் அடுத்த வாரம் நானோ அல்லது இராஜாங்க அமைச்சரோ நேரடியாக சென்று அம்பாரை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இதன்போது அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுத்த அமைச்சர், அமைச்சின் செயலாளர், அதிகாரிகளுக்கு அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட விவசாயிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் நன்றிகளை தெரிவித்தார். இதனூடாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் நன்மையடையவுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.





# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என முடிவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(கே. எ. ஹமீட் )

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இன்னும் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை என்று கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர்களில் ஒருவருமான கலாநிதி எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, காங்கேயனோடையில் சமூகப் பணியில் ஈடுபட்ட சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் அரச சேவையிலிருந்து பதவி உயர்வு பெற்ற காங்கேயனோடைச் சேர்ந்த இரு பெண் உத்தியோகத்தர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்கள் யார் என்பது பற்றி இன்னும் தெரியாது. ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பின்னர்



அது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆராய்ந்து யாருக்கு தமது ஆதரவை வழங்குவது என்று கட்சி முடிவெடுக்கும். இந்த நிலையில் இன்னும் யாரை ஆதரிப்பது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானிக்கவில்லை.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மற்றும் இலங்கை முஸ்லிம்களுடைய நிலவரம், இலங்கையினுடைய பொருளாதார நிலவரம், சிறுபான்மை சமூகங்களின் அரசியல் உரிமை போன்ற பல்வேறு விடயங்களை வைத்தே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்று தீர்மானிக்கும்.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் கடந்த சில வருடங்களாகச் சந்தித்து வருகின்ற சவால்கள் தற்போது நோக்கியுள்ள சவால்கள் குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.– என்றார்.





# அரசியல் இலாபத்துக்கு, வியாபாரத்துக்கு மக்களின் துயரத்தைப் பாவிக்கக் கூடாது!

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

(பழுவூரான்)

அரசியல் வியாபாரத்துக்காகவும், அரசியல் இலாபத்துக்காகவும் மக்களின் துயரத்தைப் பாவிக்கக்கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் முள்ளிவாய்க்கால் நினைவு தினைத்தை அனுஷ்டிப்பதற்குச் சகல உரிமையும் உள்ளது.

வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இராஜாங்க அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் விவசாய உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (17) நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்காலில் 2009 இல் கொத்துக் குண்டுகளுக்கு அகப்பட்டு எமது சமூகம் அழிந்தபோது கணவன், மனைவி, பிள்ளைகள், மற்றும் உடமைகள் அனைத்தையும் இழந்து, மக்கள் சிதறி குடிப்பதற்கு கஞ்சி கூட இல்லாமல் அவலப்பட்டனர்.

இவ்வாறான துன்பங்களை மக்கள் எதிர்கொண்ட மாதம்தான் இந்த மே மாதம். அந்த சம்பவத்தை மக்கள் நினைவு கூரத்தான் வேண்டும். அதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால் சில அரசியல்வாதிகள் பதாகைகளைக் கட்டிக் கொண்டு, அவர்களின் கட்சியின் பெயர்களையும் பொறித்துக் கொண்டு முள்ளிவாய்க்கால் நினைவு நாளை அனுஷ்டிப்பதாகத் தெரிவிக்கின்றார்கள்.

2009 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்கள் எங்கே? இதனை ஊடகங்களும் கேள்வி எழுப்ப வேண்டும்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாட்டை விட்டு விட்டு வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்கள். மக்கள் கொத்துக் குண்டுகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடி வரும் போது தேசியம் பேசியவர்கள் ஒருத்தரும் நாட்டில் இல்லை. இதனை ஊகங்களும் வெளிக் கொண்டு வரவேண்டும். தற்போது பார்த்தால் பதாகைகளைக் கட்டிக் கொண்டு கஞ்சி கொடுக்கின்றார்கள்.

அரசியல் வியாபாரத்துக்காகவும், அரசியல் இலாபத்துக்காகவும் மக்களின் துயரத்தைப் பாவிக்கக்கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் முள்ளிவாய்க்கால் நினைவு தினைத்தை அனுஷ்டிப்பதற்குச் சகல உரிமையும் உள்ளது.

அதனை யாரும் தடுக்க முடியாது. அந்த மக்கள் அந்த சம்பவங்களை நினைவு கூர்வதற்குச் சகல உரிமையும் உள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்துள்ளார். அதனை எந்த பிரிவினரும் தடுக்கக் கூடாது. அதைத்தான் நாங்களும் தெளிவாகச் சொல்கின்றோம்.- என்றார்.




# திருவேற்காட்டில் வசித்துவரும் மக்களை வெளியேற்றக் கூடாது

## சீமான் வலியுறுத்தல்



திருவேற்காட்டில் 3 தலைமுறைகளாக வசித்து வரும் பூர்வகுடி மக்களை வெளியேற்றக் கூடாது என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“ஆவடி தொகுதிக்குட்பட்ட திருவேற்காட்டில் கடந்த 90 ஆண்டுகளுக்கும் மேலாக 3 தலைமுறைகளாக பூர்வகுடி மக்கள் வசித்து வருகின்றனர். இந்த நிலையில், இத்தனை ஆண்டுகளுக்கு பிறகு அவர்களை ஆக்கிரமிப்பாளர்கள் எனக்கூறி தி.மு.க. அரசு அப்புறப்படுத்த முயல்வது கண்டிக்கத்தக்கது.

தற்போது 300 குடும்பங்களாக குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை, மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு என அனைத்தையும் பெற்று வீட்டு வரி உள்ளிட்ட அனைத்து வரிகளும் செலுத்தி, வாக்கு செலுத்தி வாழ்ந்து வரும் மக்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்று கூறுவது மனிதநேயமற்றது. அதுவும் கடந்த 60 ஆண்டுகளாக வாக்கு கேட்டுச் செல்லும்போது ஆக்கிரமிப்பு என்று தெரியாத வீடுகள், இப்போது மட்டும் எப்படி ஆக்கிரமிப்பாகத் தெரிகிறது?

தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த 3 ஆண்டுகளில் சென்னையின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் பூர்வகுடி மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றும் பணியைத் தொடர்ச்சியாகச் செய்து வருகிறது. ஏழை மக்களிடமிருந்து நிலங்களைப் பறித்து பன்னாட்டு முதலாளிகளுக்கு தாரைவார்க்கிறது. இதுதான் சமூக நீதியா?

எனவே திருவேற்காட்டில் 3 தலைமுறைகளாக வாழ்ந்து வரும் தமிழ் தொல்குடி மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதை தமிழக அரசு நிறுத்த வேண்டும். அவர்களது வீடுகளை இடிக்கும் உத்தரவை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்.”– என்று வலியுறுத்தியுள்ளார்.

# தமிழகத்தில் இந்த ஆண்டு இறுதியில் 27 உள்ளாட்சிகளின் காலம் நிறைவு

## முதல்வர் ஆலோசனை




தமிழகத்தில் இந்த ஆண்டு இறுதியில் 27 மாவட்ட உள்ளாட்சி அமைப்புகளின்பதவிக்காலம்நிறைவடைவதால், தேர்தல் தொடர்பாக தி.மு.க. மூத்த நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

ஊரக உள்ளாட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியின்போது 2019 ஆம் ஆண்டில் சில மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு அவற்றையும் சேர்த்து 9 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இதனால், 9 மாவட்டங்கள் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சிகளுக்கு கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் தேர்தல் நடைபெற்றது.

அதன்பின், 9 புதிய மாவட்டங்களில் வார்டு மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று, 2021இல் தி.மு.க. ஆட்சி அமைந்ததும் அந்தாண்டு செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் 2 கட்டங்களாக தேர்தல்கள் நடைபெற்றன.

இந்த நிலையில், 2019 டிசம்பரில் தேர்தல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகளுக்கான பதவிக்காலம் இந்தாண்டு டிசம்பர் மாதம் நிறைவடைகிறது.

உள்ளாட்சிகளின் பதவிக்காலம் முடிந்ததும், அவற்றை தரம் உயர்த்துதல், இணைத்தல் போன்ற பணிகள் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் 100 நாள் வேலை திட்டத்தை கருத்தில் கொண்டு, பல ஊராட்சிகளில் தரம் உயர்த்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இவற்றையும் பரிசீலித்து 27 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்துவற்கான ஏற்பாடுகள் மாநில தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது .

இதைத்தொடர்ந்து, வரும் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் அடுத்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவிக்காலம் முடிவடைகிறது. அப்போது அந்த அமைப்புகளுக்கான தேர்தலை நடத்த வேண்டியுள்ளது.

இந்த நிலையில், நேற்று தி.மு.க. தலைமை அலுவகம் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது கட்சிநிர்வாக ரீதியாக மாவட்டங்களை பிரிப்பது, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்துவது, தேர்தலுக்கு தயாராகுவது ஆகியவை குறித்து ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் ஜூன் 4 ஆம் திகதி மக்களவை தேர்தல் முடிவுகள் வெளியாகும் நிலையில், அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நகர்வுகளை தி.மு.க. மேற்கொள்ளும் என தெரிகிறது.



# தைவான் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின்போது தகராறு

தைவான் நாடாளுமன்றத்தில் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பான வாக்கெடுப்பின் போது முக்கிய கட்சிகளின் அரசியல் பிரதிநிதிகளிடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பான காணொலி சமூக வளைதளங்களில் வெளியாகி பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தகராறின் காரணமாக தைவான் நாடாளுமன்றமே போர்க்கலாமாக காட்சியளித்துள்ளதுடன் வெளியான காணொலியில், அரசியல் பிரதிநிதிகள் ஒருவைவரை ஒருவர் தள்ளிவிட்டு அடித்துக்கொள்ளும் காட்சிகள் பகிரப்பட்டுள்ளன.

சபாநாயகரின் இருக்கைக்கு அருகில் சென்ற பிரதிநிதிகள் மேசை மீது ஏறி நின்று கூச்சலிட்டும் ஒருவரை ஒருவர் இருக்கையில் இருந்து கீழே இழுத்தும் தாக்கியுள்ளனர்.

அத்தோடு, தைவானில் பிரதான எதிர்க்கட்சி மற்றொரு கட்சியான தைவான் மக்கள் கட்சியுடன் கூட்டணி வைத்ததால் ஆளும் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளது.

இந்த நிலையில், ஜனாதிபதியாக தேர்ந்துடுக்கப்பட்டுள்ள லாய் சிங் தே இன்னும் சில நாள்களில் அரசு பதவி ஏற்க உள்ள நிலையில், இதைப் பயன்படுத்தி அரசாங்கத்தை விட நாடாளுமன்றத்துக் அதிக அதிகாரம் வழங்குதல் மற்றும் அரசின் முக்கிய பிரமுகர்கள் மீது கிரிமினல்



வழக்குகள் பதிவு செய்தல் உள்ளிட்டவற்றை எந்த விவாதமும் முன்னறிவிப்பும் இன்றி நிறைவேற்ற பெரும்பாண்மை வாக்குகள் கொண்ட எதிர்க்கட்சி முயன்றதே இந்த தகராறுக்கு காரணமென தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கடந்த 2020 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து பன்றிகளை இறக்குமதி செய்யும் விவகாரத்தில் வாக்குவாதம் ஏற்பட்டு எதிர்க்கட்சினர் கட்சியினர் ஆளுங்கட்சியினர் மீது பன்றியின் குடலை எரிந்து தைவான் நாடாளுமன்றத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 பணயக் கைதிகளின் சடலங்கள் மீட்பு

ஹமாஸ் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 பணயக் கைதிகளின் சடலங்களை இஸ்ரேல் மீட்டுள்ளது.

மேற்படி மூவரும் கடந்த ஒக்டோபர் மாதம் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஹமாஸ் தரப்பினரின் சுரங்கப் பாதையில் அந்த சடலங்கள் மீட்கப்பட்டன என இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஹமாஸ் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளை மீட்பதற்கான செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



மீட்கப்பட்ட சடலங்கள் தெற்கு இஸ்ரேலுக்கு கொண்டு செல்லப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பரிமாற்று ஒப்பந்தத்தின் ஊடாக மாத்திரமே தங்களது தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என ஹமாஸ் எச்சரித்துள்ளது.

பக்கங்கள் 04

கனடா முரசு

சனிக்கிழமை 18/05/2024

## தட்டம்மை நோயினால் கனடாவில் சிறுமி சாவு

**10 ஆண்டுகளின் பின் முதல் சம்பவம்**

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் தட்டம்மை நோயினால் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார். பத்து ஆண்டுகளின் C2

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

# இலங்கை அரசுகளால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது இனப் படுகொலைதான்!

**தன் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகிறது கனடியத் தமிழர் பேரவை**

**ஒன்ராரியோ, மே 18**

**இலங்கை அரசுகளால் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை நடத்தப்பட்டதை திட்டவட்டமாக நம்புவதாக கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

**இது தொடர்பில் கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-**

**'1948ஆம் ஆண்டு முதல் தமிழ் இனப்படுகொலை ஈழத்தமிழர் வரலாற்றில் தொடருகிறது!**

**கனடியத் தமிழர் பேரவை தொடர்ச்சியாகத் தமிழ் மக்களின் நலன்களுக்காக உழைக்கும் வரலாற்றைக் கொண்ட அமைப்பாகும்.**

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தமிழ்ச் சமூகம் பல ஆண்டுகளாகப் பல்வேறு வகைகளில் வளர்ச்சியடைந்து வருகிறது. அதற்கான மேலதிக தேவைகளும் உருவாகி வருகின்றன. கனடியத் தமிழர் பேரவை தனது வரலாறு முழுவதும், தமிழ்ச் சமூகத்தை முதன்மைப்படுத்தி, தமிழ் மக்கள் சிறந்தவர்களாக உருவாகுவதற்கான திறனைக் கட்டியெழுப்ப உழைத்து வந்துள்ளது.

இந்த வேலைத் திட்டத்தில் இலங்கையைத் தொடர்ந்து ஆண்டு வந்த அரசுகளால் எமது மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்கு எதிராக நீதிக்காகப் போராடுவதும், அவர்களுக்கு நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களுக்குப் பொறுப்புக் கூறுவதும் அடங்குகிறது.

அதேவேளையில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள், அவர்களின் தலைவிதியை அவர்களே தீர்மானிக்கும் வகையில் தமிழ் மக்களின் எதிர்காலத்தைச் செழிக்க வைக்கும் வகையிலான அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைகளும் உள்ளடங்குகின்றன.

எங்களுடைய இந்த வேலைத்திட்டத்தில், மனித உரிமைகள் தொடர்பான புகழ் வாய்ந்த சில சர்வதேச வல்லுநர்கள், 'இனப்படுகொலை' என்ற சொல்லைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து போர்க் குற்றங்கள், மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் என்ற முறைமைகளில் போராடுவது அனைத்துலக அரங்குகளில் நடைமுறைச் சாத்தியமான வழியென எங்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர்.

கனடியத் தமிழர் பேரவை, கடந்த பல ஆண்டுகளாக இந்த ஆலோசனையையும் வழிகாட்டுதலையும் பின்பற்றி வந்திருக்கிறது. இலங்கை அரசுகள் குறித்து வரலாற்று ரீதியாக அனைத்துலக அரங்குகளில் பயன்படுத்தப்படும் சொல்லாடல்கள் எதுவாக இருந்தாலும், இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றது இனப்படுகொலை என்பதில் எங்களுக்கு எதுவித சந்தேகமும் இல்லை. நாங்கள் எப்போதும் இலங்கை அரசுகளால் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதாகவே திட்டவட்டமாக நம்புகிறோம்.

மேலே குறிப்பிட்டுள்ள காரணங்களின் படியும், எங்களிடம் அடிக்கடி கேட்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் 2019இல் நாம் அளித்திருந்த பதில்களாலும், எங்களுடைய அமைப்பு சார்ந்த மூலோபாய நிலைப்பாடு காரணமாக 'இனப்படுகொலை' என்ற பதப் பிரயோகம் தவிர்க்கப்பட்டமை குறித்த குழப்பங்கள் உருவாகியுள்ளன.

இந்த அறிக்கை எங்களின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதுடன், அனைத்துத் தமிழ் அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் எமது மக்களுக்குச் சிறப்பானதைச் செய்ய ஊக்குவிக்குமென நம்புகிறோம்.

கனடிய நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அப்பால் தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை 'இனப்படுகொலை' என உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து, அதற்குக் காரணமானவர்களைத் தண்டிக்கக் கனடா அரசு முயற்சி எடுக்க வேண்டுமென ஓர் அமைப்பாக, கனடிய அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

ஒன்றாறியோ மாகாண அரசின் 'தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம்' நிகழ்வைக் கடைப்பிடிக்கும் வேளையில், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத் தவும் தேடவும் நாம் ஒரு அமைப்பாக ஒன்று பட்டு நிற்கின்றோம். – என்று உள்ளது.



# பூர்வீகக் குடிகளுடனான உடன்படிக்கைகள் கனடிய அரசின் உறுதிமொழியின் அடையாளம்

## அமைச்சர் கரி ஆனந்தசங்கரி விளக்கம்

சசகெச்சுவான், மே 18

பூர்வீகக் குடிகளுடனான உடன்படிக் கைகள் கனடிய அரசாங்கத்தின் உறுதி மொழியின் அடையாளம் என பூர் வீகக்குடிகள் நலன்பேண் அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சசகெச்சுவானுக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் ஆனந்தசங்கரி, சக்கசாஸ் பூர்வீகக் குடிகள் மற்றும் மெடோவ் லேக் பழங் குடியின பேரவை ஆகியவற்றுடன் இரண்டு உடன்படிக்கைகளில் கைச்சாத் திட்டார்.

1884ஆம் ஆண்டில் மன்னராட்சி யின் போது இழைக்கப்பட்ட தவறினை திருத்தும் வகையில் சக்கசாஸ் பழங்குடியினருடனான உடன்படிக்கை அமைவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

மெடோவ் லேக் பழங்குடியின பேர வையுடனான உடன்படிக்கை ஆட்சி முறை, நில, நீர் வளங்களின் முகா மைத்துவம் உள்ளடங்கிய அவர்களது முன்னுரிமைகளில் கவனம் செலுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியள்ளார்.





## தட்டம்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


பின்னர் முதல் தடவையாக இவ்வாறு மரணமொன்று பதிவாகியுள்ளது.

சிறுமியின் மரணத்தை கனடிய சுகாதார திணைக்களம் உறுதி செய்துள்ளது.

ஐந்து வயதுக்கும் குறைந்த சிறுமியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த ஆண்டில் ஒன்றாரியோ மாகாணத்தில் 22 தட்டம்மை நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

இதில் 13 பேர் சிறுவர்கள் எனவும் ஏனைய வர்கள் வயது வந்தவர்கள் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.



# தாங்கள் புரிந்த இனப்படுகொலைக்கு ராஜபக்ஷக்கள் பதிலளிக்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலியேவ் வலியுறுத்துகின்றார்

ஒன்ராரியோ, மே 18

ராஜபக்ஷக்கள் புரிந்த இனப்படு கொலைக்கு பதிலளிக்க வேண்டும் என எதிர்கால கன்சர்வேட்டிவ் கட்சி அரசாங்கம் வலியுறுத்தும் என எதிர்க் கட்சித் தலைவர் பியர் பொலியேவ் தெரிவித்துள்ளார்.

மே 18ஆம் திகதிக்காக எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:-

'இன்று பழமைவாதிகள் தமிழ் இனப் படுகொலையை நினைவு கூர்கின்றனர். இனப்படுகொலை மற்றும் தமிழர் விரோதப் படுகொலைகளின் பிரசாரத் தில் தேவையில்லாமல் எடுக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்களுக்காக நாங்கள் ஒன்றாக துக்கப்படுகிறோம். இலங்கையில் உள்நாட்டுப் போரினால் அழிந்த குடும்பங்களைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்கிறோம். உயிர் பிழைத்தவர்களின் துணிச்சலை நாங்கள் மதிக்கிறோம்.



அவர்களில் பலர் எங்கள் மண்ணில் தஞ்சம் அடையத் தள்ளப்பட்டனர். கற்பனை செய்ய முடியாத துன்பங்களை அனுபவித்தாலும், தமிழ் வம்சாவளி யைச் சேர்ந்த கனடியர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கான நீதிக்கான முயற்சியை இடைவிடாது தொடர்ந்தனர். அந்த முயற்சிகளில் உங்களுடன் நின்றமைக்காக கன்சர்வேட்டிவ் கட்சியி னர் பெருமிதம் கொள்கிறார்கள். மறைந்த பிரதமர் பிறயன் மல்ரோனியின் கீழ், நூறாயிரக்கணக்கான தமிழர்கள் கறுப்பு ஜுலையின் பயங்கரமான பின்விளைவுகளில் தப்பி ஓடி, அகதி களாக கனடாவில் பாதுகாப்பைக் கண்ட னர். ஸ்டீபன் ஹார்ப்பரின் கீழ், இலங் கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்த முதல் நாடு கனடாவாகும், இது மற்ற நாடுகளை ஊழல் மற்றும் இனப்படுகொலை ஆட்சிக்கு எதிராக நிற்க தூண்டியது.

மேலும் எனது வருங்கால அரசாங் கத்தின் கீழ், கன்சர்வேட்டிவ் கட்சியினர், இலங்கையில் உள்ள அரசியல் கைதி களை விடுதலை செய்ய வேண்டும் என்றும், ராஜபக்ஷக்கள் அவர்கள் செய்த இனப்படுகொலைக்கு பதிலளிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியு றுத்துவோம். ஒன்றிணைந்து, தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியை நிலைநாட்டி, அவர்களின் மக்களுக்கு சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் கொண்டு வருவோம்.' - என்று உள்ளது.

# சீனாவின் இலத்திரனியல் வாகனங்களுக்கு மேலதிக வரி விதிக்க கனடா ஆலோசனை

ஒன்ராரியோ, மே 18

சீனாவின் இலத்திரனியல் வாகனங் களுக்கு மேலதிக வரி விதிப்பது தொடர் பில் கனடா கவனம் செலுத்தியுள்ளது.

சீனாவின் இலத்திரனியல் வாக னங்கள் மற்றும் அது சார்ந்த பொருள்க ளுக்கான வரியை அதிகரிக்கப் போவ தாக அண்மையில் அமெரிக்கா அறிவித் திருந்தது.

இது சார்ந்த அனைத்து நடவடிக்கை களையும் கவனத்தில் கொண்டிருப்பதாக கனடாவின் தொழில்துறை அமைச்சர் பிரான்சுவா பிலிப்பே செம்பெய்ன் தெரி வித்துள்ளார். கனடாவின் தொழில்து றையையும், தொழிலாளர்களையும் காப்பதற்கான அனைத்து நடவடிக் கைகளையும் அர சாங்கம் எடுக்கும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகளை வைத்திருப்பதை குற்றமற்றதாக்கும் கோரிக்கை அரசால் நிராகரிப்பு



ஒன்ராரியோ, மே 18

கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகளை வைத்திருப்பதனை குற்றமற்றதாக்குமாறு கோரிய டொரன்டோவின் கோரிக்கையை மத்திய அரசாங்கம் நிராகரித்துள்ளது.

பொதுப் பாதுகாப்பு காரணங்களை முன்னிறுத்தி இந்த கோரிக்கையை நிராகரிப்பதாக பதில் அடிமையாதல் பழக்கங்கள் தொடர்பான அமைச்சர் யாரா ஷக்ஸ் தெரிவித்துள்ளார்.

டொரன்டோவின் இந்த கோரிக்கையை நிராகரிக்குமாறு ஒன்ராரியோ மாகாண அரசாங்கமும், நாடாளுமன்ற எதிர்க்கட்சியினரும் பல வார காலமாக அழுத்தம் வழங்கி வந்த நிலையில், இன்று வெள்ளிக்கிழமையன்று (மே 18) அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஹெல்த் கனடாவுக்கு டொரன்டோ நகர சபை இந்த பிரேரணையை சமர்ப்பித்திருந்த போதிலும், 2023ஆண்டு மார்ச் மாதம் அந்த பிரேரணையில் சில மாற்றங்களை முன்வைத் திருந்தது.



# டொரன்டோ நகர சபை உறுப்பினர் ரொபின்சன் அம்மையார் காலமானார்

ஒன்ராரியோ, மே 18

நீண்ட கால டொரன்டோ நகர சபை உறுப்பினர் ஜே ரொபின்சன் அம்மையார் காலமானார்.

அவரது அலுவலகம் இந்த தகவலை மே 17ஆம் திகதி வெளியிட்டது.

டொன்வெலி வெஸ்ட் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து 14 ஆண்டுகள் டொரன்டோ நகர சபையில் ரொபின்சன் அங்கம் வகித்தார்.

நான்கு முறை நகர சபை உறுப்பினராக இருந்த ரொபின்சன், டொரன்டோ நகர சபையின் தலைவராக சிறிது காலம் பணியாற்றியிருந்தார்.

சில வருடங்களாக மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த 61 வயதான இவர், மே 16ஆம் திகதி வியாழக்கிழமை இரவு காலமானார்.

இவருக்கு மார்பக புற்றுநோய் இருப்பது 2019ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது.

ரொபின்சன் நினைவாக நகர மண்டபங்களில் கொடிகள் மே 17ஆம் திகதி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

# அலுவலகத்துக்கு வர வேண்டிய நாள்கள் அதிகரிக்கப்பட்டமை குறித்து அதிருப்தி

## ஆட்சேபனைக் கடிதங்கள் குவிகின்றன

ஒன்ராரியோ, மே 18

செப்ரம்பர் மாதம் முதல் பொது ஊழியர்கள் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டிய நாளகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஊழியர்களும், தொழிற்சங்கங்களும் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் 70,000இற்கும் அதிகமான கடிதங்கள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் திறைசேரி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் பொது சேவை கூட்டமைப்பு தொழிற்சங்கத்தின் இணைய கடித பிரசாரம் ஊடாக மே 17ஆம் திகதி வரை 45,047 கடிதங்களும், தொழில்சார் ஊழியர்களின் கனடிய அமைப்பின் ஊடாக 25,395 கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மே மாத ஆரம்பத்தில் வீட்டில் இருந்து வேலை செய்தல் தொடர்பான கொள்கையில் மத்திய அரசாங்கம் மாற்றத்தைக் கொண்டு வந்தது.



செப்ரம்பர் மாத நடுப்பகுதியில் பொது ஊழியர்கள் வாரத்தில் மூன்று நாள்கள் அலுவலகம் வர வேண்டும் எனவும், உயரதிகாரிகள் வாரத்தில் நான்கு நாள்கள் அலுவலகம் வர வேண்டும் எனவும் புதிய கொள்கை வலியுறுத்துகின்றது.